Registered as a Newspaper

STAFF COPY NOT FOR SALE

விற்பனையாகின்றது:
கணிதப்பயிற்சி
ஆண்டு 7
(புதியபாடத் திட்டத்திற்கானது)
வெளியீடு:
ஞானசுரபி
புத்தகக் கம்பனி
யாழ்ப்பாணம்.

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை: ரூ. 1-25

விற்பனையாகின்றது:
கணிதப்பயிற்சி
ஆண்டு 7
(புதியபாடத் திட்டத்திற்கானது)
வெளியீடு!
ஞானசுரபி
புத்தகக் கம்பனி
யாழ்ப்பாணம்.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஹூ சித்திரை மீ 11 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஷஃபா பிறை 24 (24-04-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 126

முதல் நாள் வெட்டிய பதுங்கு குழி உயிரைப் பாதுகாத்தது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

கடந்த இரவு வெட்டிய பதுங்கு குழியினுள் இருந்ததால் உயிர் தப்பினோம்.

இவ்வாறு கிராமசேவையாளர் செ. சச்சிதானந்தன் தெரிவித்தார்.

நேற்று நல்லூர்ப் பகுதியில் நடந்த குண்டு வீச்சுத் தாக்குதலில் இவரது வீடு பலத்த சேதமடைந்தது.

விமானங்கள் தாக்கலாம் என்ற தகவல் அறிந்து நேற்று முன்தினம் இரவிரவாகப் பதுங்கு குழி வெட்டினோம்.

காலையில் விமானச் சத்தம் கேட்டவுடன் பதுங்கு குழியினுள் சென்று பதுங்கிக் கொண்டோம். எமது வீடு சேதமுற்ற போதிலும் நாம் காயம் எதுவுமின்றித் தப்பித்துக்கொண்டோம்.

இப்படி அவர் தெரிவித்தார். (இ-7)



நேற்றைய குண்டு வீச்சுத் தாக்குதலில் சேதம் அடைந்த நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலய தேர் முட்டியின் இரு பக்கங்களையும் படத்தில் காணலாம்.

குடாநாட்டின் நான்குதிக்கிலும் நேற்றுக் குண்டுவீச்சு!

மணிக்கு மணி தொடர்ந்தது; உடைமைச் சேதம் அதிகம்

— அளவெட்டி, பலாலி, பருத்தித்துறை, வல்வைச் செய்தியாளர்கள் —

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

குடாநாட்டின் பல இடங்களிலும் நேற்றுப் பரவலாக பொதுமக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீது பொம்மர் குண்டு வீச்சுத் தாக்குதல் தொடர்ந்தும் நடத்தப்பட்டது.

பொதுமக்கள் செறிந்து வாழும் குடிமனைப் பகுதிகள் மீது ஐந்து பொம்மர்கள் நேற்றுப் பகல் முழுவதும் இடம் மாறி மாறி கொடூரமான முறையில் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

மணித்தியாலத்துக்கு ஒரு தடவை பொம்மர்கள் குடாநாடு மீது குண்டுமாரி பொழிந்தன.

நல்லூர், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, தொண்டமானாறு, காங்கேசன்துறை, சுன்னாகம், இயக்கச்சி ஆகிய பகுதிகள் நேற்றைய தாக்குதலுக்கு இலக்காகின.

இந்தத்தாக்குதலின்போது மூன்று வயதுக் குழந்தை உட்பட மூவர் உயிரிழந்தனர். ஐம்பதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். ஐம்பதிற்கும் அதிகமான வீடுகள் சேதமுற்றன.

நல்லூர்ப் பகுதியில் நேற்று மூன்றுவது தடவையாக பொம்மர்கள் அட்டகாசம் புரிந்தன.

நேற்றுக்காலை சுமார் 9-30 மணி அளவில் நல்லூர்ப் பகுதியை வட்டமிட்ட இரண்டு ஹெலிக்கொப்டர்களும் மூன்று குண்டு வீச்சு விமானங்களும் வைமன் வீதியில் குண்டுகளை வீசின.

அவ்வேளையில் பொம்மர்களை எதிர்த்துத் தாக்குதல் நிகழ்த்திய புலிகள் இயக்கப் போராளி ஒருவர் கொல்லப்பட்டார்.

இரு பாலகர்கள் உட்பட பத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

ஐந்து வீடுகள் பலத்த சேதமுற்றன. மேலும் பல வீடுகள் சிறிது சேதத்திற்குள்ளாகின.

வீரமாகாளியம்மன் கோவில் தேர் முட்டியும் சேதமுற்றது.

இப்பகுதியில் இருந்தோர் பதுங்கு குழிகளுக்குள் ஒளிந்துக்கொண்டதால் பெருமளவு உயிரிழப்புத் தவிர்க்கப்பட்டது.

பருத்தித்துறையில்

பருத்தித்துறையில் நேற்று இரண்டாவது நாளாக- மூன்றுவது தடவை- பொம்மர் தாக்குதல்கள் நடத்தன.

இரண்டு பொம்பர்களும் ஒரு ஹெலிக்கொப்டரும் தாக்குதலில் ஈடுபட்டன.

பருத்தித்துறை ஓடக்கரைச் சந்திக்கு அருகாமையிலுள்ள கைலாஸ் என்பவரின் வீட்டின் மீது இரண்டு குண்டுகள் வீசப்பட்டன அவற்றில் ஒன்று மட்டுமே வெடித்

(4 ஆம் பக்கம் பார்க்க)

நாயன்மார்கட்டில் ஷெல் 4 பேர் பலி, நால்வர் காயம்

யாழ்ப்பாணம், ஏப் 24

நாயன்மார்கட்டு பாரதி வீதியில் நேற்று மாலை 6 மணியளவில் திடீரென அடுத்தடுத்து வந்து விழுந்த ஐந்து ஷெல் குண்டுகளினால் நால்வர் உயிரிழந்தனர், நான்கு பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமாலை எதிர்பாராத விதத்தில் வந்து விழுந்த இந்த ஷெல் குண்டுகள் கோட்டை இராணுவ முகாமிலிருந்து அல்லது நாவற்குழி முகாமிலிருந்து ஏவப்பட்டவையாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்களில் குணதாஸ் மஞ்சளாதேவி (18 வயது) ஒருவர். இவர் ஒரு மாதத்திற்கு முன்னர்தான் திருமணமானவர்.

செல்லத்துரை பசோதரன் (வயது 9), பிரேம்தாஸ் ஜஸ்மின் (வயது 8) ஆகியோரும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

சீமெந்து கூட்டுத்தாபனம் மூடப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப். 24

காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனம் நேற்றுடன் தற்காலிகமாக மூடப்பட்டது.

கடந்த சில தினங்களாக ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலை காரணமாகவே தொழிற்சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

தொழிற்சாலை தொடர்ந்து இயங்குவதுபற்றி எதிர்வரும் தினங்களிலேயே பரிசீலிக்கப்படும்.

காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் இதனை உதயனுக்குத் தெரிவித்தார்.

காங்கேசன்துறையில் உள்ள லங்கா சீமெந்து லிமிட்டெட்டும் இயங்காமல் உள்ளது. (இ-7)

இன்னும் 60 பேர் ஆபத்து நிலையில்

கொழும்பு, ஏப். 24

புறக்கோட்டை பஸ் நிலையக் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்தவர்களில் இன்னும் 60 பேர் ஆபத்தான நிலையில் இருக்கின்றனர்.

இப்படி கொழும்பு பெரியாஸ்பத்திரி வைத்தியசுப்ரின்டன் டாக்டர் எம். ஜே. பி, பெர்னாண்டோ தெரிவித்தார்.

லலித் சூளுரை!

கொழும்பு, ஏப். 24

பயங்கரவாதிகள் எந்த விதமான வன்செயல் பயமுறுத்தல் மூலமும் அரசாங்கத்தையோ அல்லது பாதுகாப்புப் படையினரையோ பணிய வைக்க முடியாது.

இவ்வாறு பந்தோபஸ்து மந்திரி திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்

ரூபவாஹினிக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு சூளுரைத்தார். (ஏ)

புலிகள் பிரமுகர்கள்

பாலசிங்கம், திலகர் டில்லிக்கு அழைப்பு

கொழும்பு, ஏப். 24

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம், பேச்சாளர் லோறன்ஸ் திலகர் ஆகியோர் புதுடில்லிக்கு அவசரமாக அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்திய மத்திய அரசினால் இவர்கள் இருவரும் அவசரமாக அழைக்கப்பட்டனர் என்று நம்பத்தகுந்த வட்டாரங்களை ஆதாரங்காட்டி நேற்று இரவு வெளியான வானொலி தெரிவித்தது.

இவர்கள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரத்துடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தியதாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ-ஏ)

பொரளை சவச்சாலை அறைக்குள் அத்துமீறி பிரவேசிக்க முயற்சி

பொலீஸ் கண்ணீர்ப் புகை

கொழும்பு ஏப்ரல் 24

பொரளை சவச்சாலை அறைக்குள் நேற்று அத்துமீறிப் புகுவதற்கு எத்தனித்த கோஷ்டி ஒன்றின்மீது கண்ணீர்க் குண்டுப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

கொழும்பு பஸ்நிலையக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் அடையாளம் காணப்படாத சடலங்கள் பல இச் சவச்சாலையில் அடையாளம் காணப்படுவதற்காக வைக்கப்பட்டிருந்தன.

பலவந்தமாக உட்பிரவேசிக்க முயன்ற கோஷ்டியை கண்ணீர்க் குண்டுப்பிரயோகம் செய்தே கலைக்கவேண்டியதாயிற்று என்று தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை பற்றிய விவாதத்தில் அமைச்சர் கலந்து கொண்டு பேசினார்.

பொதுமக்களைக் காப்பாற்ற முடியாத அரசாங்கம் உடனடியாக ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று கோஷித்த வண்ணமே, இந்தக் கோஷ்டி சவச்சாலைக்குள் நுழைய முயன்றது. (இ-ஏ)

ஜே. ஆரை பதவி விலக கோரி கொழும்பில் பேரணி

கொழும்பு,ஏப்ரல் 24

ஜனாதிபதி ஜெயவர்த்தன பதவி விலகவேண்டும் என்று கோரி கொழும்பு நகரில் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது.

400க்கு மேற்பட்ட பிக்குகளும் மாணவர்களும் இந்த ஊர்வலத்தை நடத்தினர்,

எதுமறியா அப்பாவிகள் கொல்லப்படுவதைத் தடுத்து நிறுத்த தவறிவிட்டதற்காகப் பதவி விலக வேண்டும்—இப்படிக் கோரும் மகஜர் ஒன்றை ஜனாதிபதியிடம் கையளிப்பதற்காக இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது.

ஆயுதம் தரித்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

கோட்டையில் இருந்து சூடு! சின்னக்கடைப் பகுதியில் ஐவர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம்,ஏப்ரல் 24

யாழ்ப்பாணம் சின்னக்கடைப் பகுதியில் நேற்று ஐந்துபேர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்கள்.

இவர்களில் மூவர் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது சுடப்பட்டனர்.

நேற்றுக் காலையும் மாலையும் இச்சம்பவங்கள் நடைபெற்றன.

இப்பகுதியில் அடிக்கடி நடைபெற்று வரும் துப்பாக்கிப் பிரயோகங்கள் காரணமாக பலர் காயமடைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய சம்பவத்தில் காயமடைந்தோர் விபரம் வருமாறு;

ஜேம்ஸ் ஜூலட் (வயது 15) ஏ. செல்வம்(வயது 22) எஸ் மனோரஞ்சிதம்(வயது 19) எம் சிவராசர் (வயது 70) வி லுஜன் (வயது 19) (இ-10)

★ ஆட்டம் ரத்து! நியூசிலாந்து அணி புறப்பட்டது

கொழும்பு, ஏப். 24

ஸ்ரீ லங்கா — நியூசிலாந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி ரத்துச் செய்யப்பட்டது.

விளையாடவிருந்த ஏனைய இரண்டு டெஸ்ட் போட்டிகளையும் ரத்துச் செய்துவிட்டு நியூசிலாந்துக் கோஷ்டி நேற்று தாயகம் திரும்பியது

கொழும்பு பஸ் நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்தே இச்சுற்றுப்போட்டி ரத்துச்செய்யப்பட்டது (இ-ஏ)

வன்முறையிலான வெற்றி குறுகிய காலமே நிலைக்கும்! அது ஒரு மாயை

அமைச்சர் திவாரி பதில்

வன்முறையினால் பெறப்படும் வெற்றி குறுகிய காலமே நிலைக்கும். அது ஒரு மாயை

இந்திய வெளியுறவு அமைச்சர் நாராயண் தத் திவாரி நேற்று ராஜ்ய சபாக்கூட்டத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ் குடாநாடு மீது இலங்கை அரசு விமானத் தாக்குதல் நடத்தி தமிழர்களை அழித்து வருகிறது என்று ஆளும், எதிர்க்கட்சி எம்பிகள் தெரிவித்த முறையீடுகள் தொடர்பாகப் பேசுகையிலேயே வெளியுறவு அமைச்சர் இக்கருத்தை வெளியிட்டார்.

இலங்கையில் நிலவும் வன்முறையை இந்தியா கண்டிப்பதாக தெரிவித்த அமைச்சர் திவாரி, வன்முறைப் போக்கைக் கைவிட்டு பேச்சுவார்த்தையில் ஈடுபடும்படி இரு தரப்புக்களிடமும் விண்ணப்பித்துக் கொண்டார். (இ-ஏ)

ஷெல்களால் அச்சுவேலி அதிர்ந்தது!

அச்சுவேலி, ஏப் 24

அச்சுவேலி சந்நிதி கோவில் வீதி, பத்தமேனிப் பகுதிகளில் புதன்கிழமை இரவு ஐந்து ஷெல்கள் விழுந்து வெடித்தன.

பலாலி, தொண்டமனாறு இராணுவமுகாம்களில் இருந்து இந்த ஷெல்கள் ஏவப்பட்டன.

இரவு நித்திரையில் இருந்த மக்கள் ஷெல்கள் வெடித்த சத்தம் கேட்டு ஓடி பாதுகாப்புத் தேடினர்.

மருத்துவ விடுதி ஒன்றுக்குள் அருகில் உள்ள வளவில் விழுந்து வெடித்த ஷெல்லால் மருத்துவ விடுதிக்கு பாதிப்பு ஏற்பட்டது.

மருத்துவ விடுதியில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

விமானத் தாக்குதலிலிருந்து தமிழரைக் காப்பாற்றுங்கள்

ராஜ்ய சபையில் தி.மு.க. எம்.பி அவசர கோரிக்கை

புதுடில்லி, ஏப். 24

விமானத் தாக்குதலில் இருந்து இலங்கைத் தமிழரைக் காப்பாற்றுங்கள்.

நேற்று ராஜ்ய சபைக் கூட்டத்தில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழக எம் பி திரு. எம் கோபாலசுவாமி மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

மோசமடைந்து வரும் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து ராஜ்ய சபையில் ஆளும் கட்சி, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பலர் கவலை தெரிவித்தனர்

கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் இடம்பெற்ற வன்செயல்கள் பற்றிக் கவலையும் கண்டனமும் தெரிவித்த திரு. கோபாலசுவாமி, இதற்கு பதிலடியாக தமிழர் மீது விமானத் தாக்குதல் நடத்த இலங்கை அரசு முனைந்துள்ளதைக் கண்டித்தார்.

மோசமடைந்து வரும் ... நிலைமையை உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும். இந்தியா தலையிட்டு

இலங்கை நிலைபற்றி இந்திய அரசு அறிக்கை ஒன்றைச் சபையில் சமர்ப்பிக்க வேண்டும்–

இப்படி திரு. கோபாலசுவாமி தெரிவித்தார்.

தெலுங்கு தேசம் கட்சி எம் பி திரு உபேந்திரா சொன்னதாவது;

இந்தியா மற்றும் அவ்வாறு செய்வதில் இல

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

24-04-1987

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:–
6-00 முதல் 7-30 வரை

ராகுகாலம்:–
10-30 முதல் 12-00வரை

இன்று பாலுக்கும் இரவுக்கும் பொருந்தும் ஏகாதசி விரதம்

பூச்சிமிறளி

சிங்களவருக்குப் பாதுகாப்பில்லை என்ற காரணம்... ஜே. ஆரை ராஜினாமாச் செய்யச் சொல்லிப் பேரணியாம். தமிழருக்கு ஏதோ பாதுகாப்புத் தந்திருக்கிறாரே...? உதைக்குப் பின்னாலே பெரிய அரசியல் உத்தரம் இருக்கலாம் இல்லை...!

கூட்டணி கோரிக்கை

சென்னை, ஏப் 24

இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் கொண்டு வரப்படவேண்டும்.

– இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

கொழும்பு வன்செயல்கள், அதைத் தொடர்ந்து யாழ் குடா மீது நடத்தப்படும் விமானத் தாக்குதல்களைக் கூட்டணி வன்மையாகக் கண்டிக்கிறது என்றும் திரு. அமிர்தலிங்கம்தெரிவித்தார். (உ-ஏ)

லண்டன் நாளிதழ்களில் முன்பக்கச் செய்தி

லண்டன், ஏப். 24

கொழும்பு, கந்தளாய் வன்செயல்களுக்குப் பதிலடியாக யாழ் குடா மீது விமானத் தாக்குதலை இலங்கை அரசு ஆரம்பித்துள்ளது குறித்து லண்டன் நாளிதழ்கள் நேற்று முக்கியத்துவம் கொடுத்து முதல் பக்கத்தில் செய்திகள் வெளியிட்டன. (இ-ஏ)

பழிவாங்கும் நடவடிக்கை வேண்டாம்

கொழும்பு, ஏப். 24

பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம்.

இப்படி இலங்கை அரசை கம்யூனிஸ்ட் கட்சியும் நவசமசமாஜக் கட்சியும் கோரியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

இன்றைய சிறு விளம்பரங்கள்

தேவை

மூளாயில் ஆரம்பிக்கப் படவிருக்கும் பார்மஸிக்கு அனுபவமுள்ள பெண் பிள்ளை தேவை. கீழ்க்கண்ட முகவரியுடன் நேரில் தொடர்புகொள்ளவும். மொடேர்ன் பார்மஸி, பிரதான வீதி, சங்கானை (1225)

சோதிடம்

அறிந்துவிட்டீர்களா? 18-6-1987ல் மீண்டும் வியாழன் மாறுவது உங்களுக்கு எப்படி? சோதிடர் ஆ. சிவராசா வேலணை. (1230)

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

சுண்டுக்குளிப் பகுதியில் விழுந்துவெடித்தஷெல்

யாழ்ப்பாணம், ஏப் 24 நேற்றிரவு கோட்டையில் இருந்து ஏவப்பட்ட ஷெல் சுண்டுக்குளிப்பகுதியிலும் விழுந்து வெடித்தது.

றக்கா வீதியில் உள்ள எம். ராஜேந்திரம் என்பவரது வீட்டு முன்புறம் இரண்டு அறைகள் முற்றாக சேதமுற்றன இந்த வீட்டில் அவரது மருமகன் வசித்து வருகிறார்.

கோவில் வீதி, றக்கா வீதி சந்தியில் உள்ள பீற்றர் ராஜசிங்கம் என்பவரின் வீட்டின் ஒரு பக்கம் பலத்த சேதத்திற்குள்ளானது

றக்கா வீதியில் உள்ள புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் முன்புறமும் சிறிது சேதமுற்றது (இ-எ)

படுத்திருந்ததால் ஷெல்லுக்கு தப்பினர்

யாழ்ப்பாணம், 24 நாங்கள் படுத்திருந்தபடியால் ஷெல்லுக்குத் தப்பியவர்களாக இருப்போம் இவ்வாறு ஏ. தருமபாலன் என்பவர் சொன்னார்.

சம்பவ தினம் நாங்கள் டெலிவிஷன் பார்த்துக் கொண்டு இருந்தோம். கோட்டையில் இருந்து ஷெல் சத்தம் கேட்ட போது எல்லோரும் படுத்து விட்டோம்.

தொடர்ந்து வந்த ஷெல் எமது வீட்டு முற்றத்தில் விழுந்து வெடித்தது

நாம் முன்னர் இருந்த இடத்தை எல்லாம் ஷெல் சேதப்படுத்தியது

இவ்வாறு அவர் மேலும் சொன்னார்

யாழ் றக்கா வீதியில் உள்ள இவரது மாமனார் வீட்டில் இவர் வசித்து வருகிறார். (இ-ஈ)

கம்பஹாவில் நிலைமை கட்டுப்பாட்டில்

கொழும்பு ஏப்ரல் 24 கம்பஹா மாவட்டத்தின் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக அரசு அறிவித்துள்ளது.

சமூக விரோதச் சக்திகள் என்று அடையாளம் காணப்பட்ட நூறு பேர் வரையில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (இ-எ)

அரசு துணிந்து முடிவு எடுக்க வேண்டும்

தவறினால் ஒற்றையாட்சிக்கு ஆபத்து என்கிறார் மன்சூர்

அம்பாறை, ஏப் 24 இந்த அரசாங்கம் ஆட்சிப் பீடம் ஏறிப் பத்து வருடங்களாகியும் அளித்த வாக்குறுதிப்படி சிறுபான்மையினரான தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சினைகள் திருப்திகரமாகத் தீர்த்து வைக்கப்படவில்லை இது கவலைக்குரிய விடயமாகும். ஐக்கிய தேசியக் கட்சி துணிந்து முடிவெடுத்தால் ஒழிய நாட்டின் ஒற்றையாட்சியைப் பாதுகாக்க முடியாது

முல்லைத்தீவு மாவட்ட அமைச்சரும், கல்முனைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாப் ஏ. ஆர். மன்சூர் மேற்கண்டவாறு கூறினார்.

அட்டாளைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஐக்கிய தேசியக் கட்சிக் கிளைகளின் பேராளர் மாநாடு அட்டாளைச்சேனை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது

மாநாட்டில் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பொத்துவில் முதல்வர் ஜனாப் எம் ஐ. உதுமாலெவ்வை தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் மாவட்ட அமைச்சர் ஜனாப் மன்சூர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

இந்த அரசாங்கம் நாட்டின் பொருளாதார சமூக அடிப்படையில் புரட்சிகரமான திட்டங்களை அமுல்படுத்தி வந்துள்ளது.

எனினும் ஐக்கியதேசியக் கட்சியின் கொள்கை மற்றும் தலைமைப்பீட முடிவுகளை நாம் அவதானித்து வருகின்ற வேளையில் தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்போமென அளிக்கப்பட்ட வாக்குறுதி இந்த அரசாங்கம் இதுவரை திருப்திகரமாக நிறைவேற்றி வைக்கப்படவில்லை

நாடு இரண்டாகப் பிளவுபடக்கூடிய பல சம்பவங்கள் தினமும் நடந்து கொண்டிருக்கின்றன, பல உயிர்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றன

ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள பல பிற்போக்கு சக்திகள் அரசினதும், ஜனாதிபதியினதும் நல் நோக்குடனான நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாக இருந்து வருவதாலேயே பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது

கனடா நாட்டிலும் ஒரு காலத்தில் இத்தகைய பிரச்சினை எழுந்த போது அந்த நாட்டின் பெரும்பான்மை மக்கள் சிறுபான்மை மக்களுக்காகப் பல தியாகமான தியாகங்களைச் செய்ய முன் வந்தனர்.

அதனால் அந்த நாடு எந்த வகையிலும் கூறுபடாமல் இன்று செழிப்புற்று திகழ்கின்றது.

அதேபோன்று இங்குள்ள பெரும்பான்மையினரும் நல் மனதுடன் சிறுபான்மையினர் விடயத்தில் நடந்து கொள்ள முன்வரவேண்டும்.

ஜனாதிபதி நியாயமான தீர்வுக்கு உடன் முடிவு எடுத்து எமது சகல இன மக்களும் ஒன்றித்து வாழவும், நாட்டைக் கட்டி எழுப்பவும் ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். (இ-1)



நேற்று முன்தினம் அதிகாலை காங்கேசன்துறை ஹாவர்வியூ மினி முகாமில் விடுதலைப்புலிகளினால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களைப் படத்தில் காணலாம். (இ-எ)

விளையாட்டரங்கு

கிறீன்ஸ் கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், ஏப் 24 மானிப்பாய் கிறீன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 9 பேர் பங்குகொள்ளும் மட்டுப்படுத்தப்பட்ட 16 ஓவர்களைக் கொண்ட இந்த போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 28 ஆகும்.

யாழ் மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கழக அணிகள் தமது விண்ணப்பங்களை கிறீன்ஸ் விளையாட்டுக் கழகம், அருள்மனை, கடுவில் வீதி, மானிப்பாய். என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (இ-7)

உடுவில் கல்வி வலய கல்வி முன்னேற்ற கழக விளையாட்டு விழா

சுன்னாகம், ஏப்.24 சிறுவர் நூலக நிதிக்காக உடுவில் கல்வி வலய கல்வி முன்னேற்றக் கழகம் பிரமாண்டமான விளையாட்டு விழாவை ஒழுங்கு செய்துள்ளது

ஜூன் மாதத்தில் நடைபெற உள்ள விளையாட்டு விழாவில் யாழ் மாவட்டத்திலுள்ள சகல விளையாட்டுக் கழகங்களும், சனசமூக நிலையங்களும் பங்குபெற அழைக்கப்படுகின்றன.

தமிழர்களின் கலாசார பெருமைமிக்க விளையாட்டுக்களான மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியும் தாச்சிப் போட்டியும் விழாவில் சிறப்பம்சமாக இடம்பெறுகின்றன

சைக்கிள் ஓட்டப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டி, சரபந்தாட்டம், கால்ப்பந்தாட்டம் கிரிக்கெட் ஆகிய சுற்றுப் போட்டிகளும் பெண்களுக்கான வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியும் விழா அமைப்புக் குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

சகல சுற்றுப்போட்டிகளுக்கும் விண்ணப்ப இறுதித்தினம் மேமாதம் 15 ஆகும்.

போட்டிகள் சம்பந்தமான சகல விபரங்களுக்கும் செயலாளர், கல்வி முன்னேற்றக் கழகம் சுன்னாகம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது (இ-27)

காங்கேசன் ஷெல் தாக்குதலில் காயமுற்றோர்

காங்கேசன்துறை, ஏப் 24 காங்கேசன்துறைப் பகுதியில் புதன்கிழமை இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் காயம் அடைந்தோர் வருமாறு:

எஸ். தம்பிமுத்து (53 வயது) குருவீதி, காங்கேசன்துறை

இளையவன் கனகலிங்கம் (28 வயது) காங்கேசன்துறை

கந்தன் சந்திரன் (22 வயது) தெல்லிப்பளை.

சின்னத்தம்பி செல்லப்பா (83 வயது) தையிட்டி

இளையதம்பி விசாலாட்சி (60 வயது) கீரிமலை

வேலுப்பிள்ளை சுமித்ரா (8 வயது) மல்லாகம்

மாணிக்கம் ஈஸ்வரி (9 வயது) அராலி

குப்புச்சாமி சண்முகம் (60 வயது) ஏழாலை

வசந்தராசா ஸ்ரீதரன் (38 வயது) தெல்லிப்பளை. (இ-68-119)

எயர்லங்கா விசாரணைக் குழு அறிக்கை

கொழும்பு, ஏப் 24 எயர்லங்கா விசாரணைக் குழு தனது அறிக்கையை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் கடந்த திங்கட்கிழமை சமர்ப்பித்தது.

அறிக்கை 275 பக்கம் கொண்டது 8 மாத கால விசாரணையின் பின்னர் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது.

1979--86 வரையான எயர்லங்காவின் நடவடிக்கை குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவே இந்த விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது.

முன்னாள் நீதியரசர் திரு விக்டர் பெரேரா, குழுவின் தலைவர். (இ-எ)

சர்வதேச மொழியான ஆங்கிலத்தை கற்பது மிகவும் அவசியம்

வட்டுக்கோட்டை, ஏப்.24 அன்றைய அரசியல்வாதிகள் சிங்கள மொழியைப் படிக்கவேண்டாம் என்று எமக்குக் கூறிவிட்டு தமது பிள்ளைகளுக்கு சிங்களத்தையும் ஆங்கிலத்தையும் நன்றாகப் படிப்பித்தனர். தமிழ் மொழியோடு ஏனைய மொழிகளையும் நாம் கற்கவேண்டியது அவசியம். அதுவும் சர்வதேச மொழியாகிய ஆங்கிலத்தை கற்றுக் கொள்வது மிகமிக அவசியம்.

சித்தன்கேணி கலைநகர் தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் ஆங்கில வகுப்பை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மாவட்ட தேசிய இளைஞர் சேவை அதிகாரி திரு. கே. என். கார்த்திக் மேற்கண்டவாறு கூறினார்.

சித்தன்கேணி கலைநகர் தேசிய இளைஞர் சேவை மன்றத் தலைவர் திரு. கு. கோகுலதாசன் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்த தேசிய இளைஞர் சேவை அதிகாரி திரு. கே. என். கார்த்திக் தொடர்ந்து பேசுகையில் ஆங்கிலம் ஓர் உலக மொழி. அம்மொழியைக் கற்பதன் மூலம் ஏனைய நாட்டு மக்களின் கலை, கலாசாரங்களையும் பாரம்பரியங்களையும், பண்பாடுகளையும் இலகுவில் அறிந்து கொள்ளலாம் என்றார்.

ஆங்கில வகுப்பு ஆசிரியர் திரு. சு. சின்னப்பாபிள்ளை, கலைநகர் தேசிய இளைஞர் சேவை மன்ற ஆலோசகர் சைவப்புலவர் திரு நா. க. தங்கரத்தினம் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர். (இ-161)

பாஸ்போர்ட் புதுப்பிக்கச் சென்றவர் கைதாகி விடுதலை

அச்சுவேலி, ஏப். 24 எட்டுவருடங்கள் வெளிநாட்டில் கடமை புரிந்துவிட்டு விடுமுறையில் இலங்கை திரும்பிய இளைஞர் ஒருவர் தமது பாஸ்போர்ட்டைப் புதுப்பிப்பதற்காக கொழும்பு சென்றபோது பொலிசாரால் கைது செய்யப்பட்டார் 10 தினங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு அவர் விசாரணை செய்யப்பட்டார்

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

அச்சுவேலி வரணியைச் சேர்ந்த திரு கு சிவசுப்பிரமணியம் 8 வருடங்கள் பிரான்சில் தொழில் பார்த்துவிட்டு அண்மையில் இலங்கைக்குத் திரும்பினார்.

பாஸ் போர்ட்டைப் புதுப்பிப்பதற்காக அவர் கொழும்பு பாஸ்போர்ட் அலுவலகத்திற்குச் சென்றார்.

அப்போது அந்த இளைஞர் சிவில் உடையில் நின்ற பொலிசாரினால் கைது செய்யப்பட்டார். 10 தினங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு மிகத் தீவிரமான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபின்னரே விடுதலை செய்யப்பட்டார். (இ-11)

ஊரடங்கை மீறினால் சுடும்படி உத்தரவு

கொழும்பு ஏப்ரல் 24 கொழும்பு மாநகரில் ஊரடங்குச் சட்டநேரத்தில் வெளியே காணுபவர்களைக் கண்ட இடத்தில் சுடும்படி அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது

புறக்கோட்டை பஸ் நிலைய குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து தமிழருக்கு எதிரான தாக்குதல்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்குடன் கண்ட இடத்தில் சுடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன

நேற்றுக்காலை ஊர

பட்டபின்னர் கொழும்பு மாநகரில் மக்கள் தமக்கு அன்றாட உணவுப் பொருள்களை வாங்குவதில் அவசரம் அவசரமாக ஈடுபட்டு இருந்தனர்.

முக்கிய சந்திகளில் ஆயுதம் தரித்த முப்படையினர் காவலில் நின்றனர்.

ஹெலிக்கொப்டர்கள் தாழப்பறந்து கண்காணிப்பில் ஈடுபட்டன.

குண்டு வெடிப்பிற்கு இலக்கான புறக்கோட்டைப் பகுதி மயான அமைதியுடன் காணப்

மாநிலம் மாவட்டம் உள்ளூர்

ஆயுர்வேத டிப்ளோமாபரீட்சை ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப். 24 புதனன்று கொழும்பு, களுத்துறை மாத்தறை ஆகிய இடங்களில் நடைபெறவிருந்த ஆயுர்வேத டிப்ளோமா பரீட்சை இம்மாதம் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நாட்டில் நிலவும் பதற்ற நிலைமை காரணமாக இப்பரீட்சை பின் போடப்பட்டது (இ-எ)

மக்கள் முகம்

கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம்

யாழ்ப்பாணம், ஏப் 24 யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது

சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. பி மகேந்திரன் உபதலைவர்கள்: திருவாளர்கள் கே. பூபாலசிங்கம், இ. சற்குணராயர், எம் டி. தம்பிராஜா, என் சிவசோதி, டி எம். வேதபரணம்.

செயலாளர்: திரு. எஸ் உமாகாந்தன் உபசெயலாளரும், பொரு

நந்தகுமார் நிர்வாக சபை: திருவாளர்கள். என். எஸ், சிவஞான சேகரம், என் டபிள்யூ. பரமேஸ்வரன், [illegible]

கணக்காய்வாளர்: திரு பி.சி அந்தோனி.

பருத்தித்துறையில் சேதமடைந்த வீடுகள்

பருத்தித்துறை, ஏப்.24 புதனன்று இடம்பெற்ற குண்டுவீச்சில் பருத்தித்துறை தட்டாதெருச் சந்தியிலிருந்து விஸ்வகுல ஒழுங்கையில் உள்ள சுமார் பத்து வீடுகள் முற்றாகச் சேதமுற்றன. மேலும் மற்றுமொரு குண்டுவீச்சுச் சம்பவம் தென்புலோலி உபயகதிர்காம வீதியில் இடம்பெற்றது. இச்சம்பவத்தின்போது இரண்டு வீடுகள் சேதமுற்றன.

சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்கள் விவரம்:-

திரு. இரத்தினசிங்கம் இராசநாயகம், வைத்திய கலாநிதி எஸ் ராஜரத்தினம், திரு. நவரத்தினம் துரைராஜா, வைத்திய கலாநிதி கே. பஞ்சநாதன், திருமதி இராசரத்தினம் இந்திராணி, திரு கே. சிவஞானம், திருமதி மகாலிங்கம் புஷ்பராணி, திரு கே இராமச்சந்திரன், திரு பொ. இராசதுரை, திரு எம். சண்முகசுந்தரம்.

தென்புலோலி உபயகதிர்காம வீதியில் நடைபெற்ற குண்டு வீச்சில் இரண்டு வீடுகள் முற்றாக சேதமுற்றன உரிமையாளர்கள் விவரம் வருமாறு:

திரு. வி. கதிர்காமத்தம்பி, கண்டுப்பெத்தை பொறியியற் பீட கலாநிதி திரு. சி சிவசுப்பிரமணியம்

இவ்வீட்டில் பருத்தித்துறை மகப்பேறு வைத்திய கலாநிதி ஆர். குழந்தை வடிவேல் வாடகைக்கு இருந்தார்.

மற்றொரு தாக்குதலில் ஓராங்கட்டையிலுள்ள வீடுகள் சேதமாகின.

சேதமுற்ற வீடுகளின் உரிமையாளர்கள் விவரம்:-

திருமதி கனகசபை பார்வதிப்பிள்ளை, கைலாஸ் வீடியோ சென்ரர். இளைப்பாறிய தபாலதிபர் திரு. எஸ். சவுந்தரராஜா, திருமதி கதிர்காமநாதன் தையல் நாயகி, திரு. பொன்னையா இரத்தினசிங்கம். (இ-118)

காங்கேசனில் 17 பேர் பலி என்கிறது அரசு

கொழும்பு, ஏப்ரல் 24 காங்கேசன்துறை மினி ஆயுதபடை முகாம் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் 14 இராணுவத்தினரும் 3 பொலீஸ் கொமாண்டோக்களும் கொல்லப்பட்டனர். [illegible] இராணுவ அதிகாரி ஒரு [illegible] இந்த வானொலி பி பி சி வானொலி ஆசியசேவை

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை விருது

யாழ்ப்பாணம், ஏப்.24 வடபிராந்திய சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆணையாளர் திரு எஸ் சுப்பிரமணியத்தின் சேவையைப் பாராட்டி சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கம் அவருக்கு 15 வருட சேவை விருது வழங்கி கௌரவித்தது

திரு. எஸ் சுப்பிரமணியம் சுற்றுடல் பாதுகாப்பு, பேசாக்கு, முதலுதவியும் பராமரிப்பும், தலைமைத்துவம், சமூக சேவை ஆகிய விடயங்களில் மாணவர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறார். (இ-எ)

சிப்பாய்கள் வெளியேற முயற்சி

பருத்தித்துறை, ஏப்.24 பருத்தித்துறை இராணுவ பொலீஸ் கூட்டு முகாமைச் சேர்ந்த சிப்பாய்கள் சுமார் 50 பேர் சுப்பர்மடம் பகுதியில் வெளியேற முயற்சித்தனர்.

இதனைக் கண்ணுற்ற போராளிகள் சிப்பாய்களை நோக்கி கைக்குண்டுகளையும் சிறு பீரங்கித் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

இதனையடுத்து இராணுவத்தினர் முகாமிற்குத் திரும்பி அங்கிருந்து ஷெல்களை ஏவினர்.

இச்சம்பவம் புதன் கிழமை இடம் பெற்றது.

நினைவஞ்சலி



தோற்றம்: 06 - 07 - 1959

மறைவு: 24 - 04 - 1984

திதி: 22 - 04 - 1987

இராசதுரை ஜெயச்சந்திரன்
(பார்த்தன்)

மூன்றாண்டுகள் கழிந்தனவே
முன்னின்று உழைத்தாயே
மூவுலகம் தேடினாலும்
முழுமதியைக் காணவில்லை
கணப்பொழுதில் மறைந்தாயே
கலங்கித் தவித்தோமே
கண்மணியை இழந்தோமே

பெற்றோர், சகோதரர்கள்,
சகோதரிகள், ஜென்னி
உறவினர், நண்பர்கள்

133, பிரதான வீதி,
திருகோணமலை. (1218)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

மனிதனே! கடவுளை அடைக்கலமாக அடை. அவனிடம் சரண்புகு. அப்போதே மகாமாயை கருணை கொண்டு விடுதலை வழியைத் திறப்பாள்.

—அன்னை சாரதாதேவி—

உதயன்

இல.18, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். தொலைபேசி: 24808 / 23078

வெள்ளி 24-04-1987 த.செ.இல. 83

வஞ்சம் தீர்க்கிறது வஞ்சக அரசாங்கம்!

நெருப்பை நெருப்பால் அணைக்கலாம்— அணைக்க வேண்டும் என்ற கொள்கை உசிதமா? சாத்தியமானதா?

இது என்ன புதுவிதமான கேள்வி என்று எண்ணுகிறீர்கள். நெருப்பை நெருப்பால் தணிக்க முடிவு செய்திருக்கிறது ஸ்ரீலங்காவின் தர்மிஷ்ட அரசு.

கொழும்பு போன்ற வெளியூர்களில் பொதுமக்கள் கொல்லப்படுவதை, வடபகுதித் தமிழ் மக்களைக் கொல்வதன் மூலம் நிறுத்தலாம் என்று அரசாங்கம் நினைக்கிறது. நினைப்பதோடு நிற்கவில்லை அதற்கெனச் சூளுரைத்து, தீர்மானம் எடுத்துச் செயலிலும் இறங்கிவிட்டது.

வன்செயல்களை வன்செயல்களாலோ அல்லது அரச பயங்கரவாதத்தாலோ தணிக்கலாம் என அரசு இனியும் பகற்கனவு காணக்கூடாது என்று நேற்று இப்பத்தியில் இடித்துரைத்திருந்தோம்.

நாம் எழுதிய மை காய்வதற்கு முன்னரே நேற்று முற்பகல் கூடிய ஸ்ரீலங்கா அரசின் மந்திரிப் பிரதானிகள், நெருப்பை நெருப்பால் அணைக்க — வன்செயல்கள் மூலம் வன்செயல்களை அடக்க முடிவு செய்து அதற்கான உத்தரவுகளையும் வழங்கி இருக்கிறார்கள்.

* வெளியூர்ப் பொதுமக்கள் மீதான தாக்குதல் தொடருமானால் வடக்கில் உள்ள தமிழ்ப் போராளிகள் தளங்கள் மீது விமானத் தாக்குதலை தொடர்ந்து நடத்துதல்

* பயங்கரவாதத்தையும், பயங்கரவாதிகளையும் அழித்து விடுவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

இந்த இரண்டு தீர்மானங்களையும் அமைச்சரவை மேற்கொண்டது.

யாழ்ப்பாணத்தில் தேவை ஏற்படும் பட்சத்தில் அகிலம் அகிலமாகச் சுட்டுத் தாக்குதல் நடத்தலாம் என்பதும் உத்தரவுகளில் ஒன்று. அமைச்சரவையின் முடிவுகள் வெளித்தோற்றத்துக்குப் பயங்கரவாதத்தை, போராளிகளை அழிப்பதற்கான தீர்மானங்கள் போலத் தெரிவதில் வியப்பில்லை. பயங்கரவாதத்தை நிர்மூலமாக்கி சமாதானத்தை நிலைநாட்ட அரசாங்கத்துக்கு உதவுமாறு வெளிநாடுகளிடம் வேண்டுகோள் வேறு விடுக்கப்பட்டிருக்கிறது! தர்மிஷ்ட அரசு சமாதானத்தின் வடிவம் என்று வெளிநாடுகளுக்குக் காட்டிக் கொள்வதற்கான ஆசாடபூதித்தனம் இது!

யாழ்ப்பாணத்தில் உள்ள தீவிரவாதிகளை ஒரே நாளில் ஒழித்துக் கட்டமுடியும். அது பேரழிவைக் கொண்டு வரும். சமாதானத்தை விரும்பும் மக்களுடன் தீவிரவாதிகள் வாழ்வதால் தீவிரவாதிகளை அழிக்க முற்படும்போது பொதுமக்களும் பாதிக்கப்படுவார்கள். அதனால் தான் தீவிரவாதிகளை அழிக்கும் நடவடிக்கையை அரசு மேற்கொள்ளமுடியாதிருக்கிறது.

இப்படி இம்மாதம் 18 ஆம் திகதி நுவரெலியாவில் வைத்துக் கூறிய ஜனாதிபதிக்கு நான்கு நாட்களின் பின் கொழும்பில் அது மறந்து போய்விட்டதா?

போராளிகள் தளங்களைத் தாக்குமாறு உத்தரவிட்டிருக்கிறார்.

போராளிகள் தளங்களை தாக்குவது என்பதன் அர்த்தம் குடாநாட்டில் வாழும் தமிழ் மக்களை தாக்கி அழிப்பது என்பதுதான். 1986 ஜனவரியில் நாவற்குழியில் ஆரம்பித்த வான் தாக்குதல் முதற்கொண்டு நேற்று வீரமாகாளி அம்மன் கோவிலைத் தாக்கியது வரை, குடாநாட்டு மக்கள் அனுபவ ரீதியாகக் கண்ட உண்மை இது. முழு உலகமும் அறிந்த யதார்த்த பூர்வமான உண்மை இது.

அவ்வாறுயின் வெளியூர்ப் பொதுமக்கள் மீதான தாக்குதல் தொடரும்வரை போராளிகள் தளங்கள் மீது விமானத் தாக்குதல் நடத்தப்படும் என்பதன் அர்த்தம் என்ன?

திருமலை, புறக்கோட்டைச் சம்பவங்களுக்குப் பழிக்குப் பழி வாங்கத் தமிழ் மக்களைக் கொல்வதே அதன் அர்த்தமாகும். இதைவிட வேறு என்ன அர்த்தம் கற்பிக்க முடியும்? அரசின் உள்நோக்கம் பழிக்குப் பழி—வஞ்சம் தீர்த்தல். அதனால் வான் தாக்குதல் நடத்தக்கூடிய இடங்களை விட்டு வெளியேறுமாறு குடாநாட்டு மக்களுக்கு வேண்டுகோள் வேறு! அவர்கள்மீது அக்கறை இருப்பதாக ஒரு கபடம் நிறைந்த நடிப்பு!

வீடுகளை விட்டு வெளியேறுமாறு கூறும் அரசாங்கம் அவர்களுக்குப் பாதுகாப்பான இடங்கள் எவை என்று அறிவித்ததா அல்லது அதற்கான ஏற்பாடுகள் எதையாவது செய்து கொடுத்ததா?

தென்னிலங்கை மக்கள் பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு பாதுகாப்பான இடங்களை அரசே தேடிக் கொடுக்கிறது.

இங்கே குடாநாட்டில் கடந்த நான்கு வருடங்களாக ஷெல் அடி, குண்டு வீச்சு ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசோ அதன் அதிகாரிகளோ பாதுகாப்பான இடம் எதையாவது ஒழுங்கு செய்தது உண்டா?

அப்படியிருக்க என்ன மனத்துணிவோடு பாதுகாப்பான இடங்களுக்கு போகுமாறு வஞ்சக அரசு குடாநாட்டு மக்களைக் கேட்க முடியும்? அதற்கு என்ன உரிமை உண்டு?

எனவே அரசின் குடாநாடு மீதான வான் தாக்குதல் வஞ்சம் தீர்க்கும் நடவடிக்கையே என்பதை வெளிநாடுகள் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த ஆபத்தான வேளையிலும் ஸ்ரீலங்கா அரசு கோமாளிக் கூத்து நடத்தி உலகத்தை ஏமாற்ற முனைகிறது என்பதை உணர்ந்துகொள்ளுதலும் அவசியம்.

எல்லையில் படைக்குவிப்பு:

சீனக் குற்றச்சாட்டை இந்தியா நிராகரித்தது

புதுடில்லி, ஏப்ரல் 23

தனது எல்லையில் இந்தியத் துருப்புகள் குவிக்கப்படுவதாக சீனா தெரிவித்த குற்றச்சாட்டை— இந்திய அரசு நிராகரித்து விட்டது.

இந்திய-சீன எல்லைப் புறத்தில் இந்தியத் துருப்புக்கள் குவிக்கப்படவில்லை! பயிற்சி ஒத்திகைகள் இடம்பெறவுமில்லை — இப்படி இந்தியா அறிவித்து உள்ளது.

இதனிடையில் எல்லைப் புறப் பிரச்சினையைத் தீர்க்க இரண்டு நாடுகளும் உச்சி மாநாடு ஒன்றை நடத்த வேண்டும் என்று ரஷ்ய அரசு விண்ணப்பித்துக் கொண்டுள்ளது.

சீனாவின் குற்றச்சாட்டு இந்திய-சீன ராஜதந்திர உறவில் பதற்றநிலையை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் இந்திய-பாகிஸ்தான் எல்லைப்புறத்தில் இருதரப்பினரும் துருப்புக்களைக் குவித்ததைத் தொடர்ந்து பதற்ற நிலை ஏற்பட்டது.

பின்னர் இரண்டு நாடுகளும் பேச்சுகளை நடத்தி பதற்ற நிலையைத் தணித்து துருப்புக்களை விலக்கிக் கொண்டன (இ எ)

போலந்து நாடு கடத்தியது

வார்சோ, ஏப். 23

அமெரிக்க ராஜதந்திரி ஒருவரை களவாளி என்று கூறி போலந்து நாடு கடத்தியது

இது அமெரிக்க ராஜாங்க அமைச்சுக்கு ஆத்திரத்தைக் கிளப்பியுள்ளது (இ-எ)

20 லட்சம் படைவீரருக்கு எய்ட்ஸ் பரிசோதனை

வாஷிங்டன், ஏப். 23

அமெரிக்காவின் முப்படைகளைச் சேர்ந்த 20 லட்சம் துருப்புக்கள் எய்ட்ஸ் நோய் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

படையினரில் சுமார் மூனாயிரம் பேருக்கு எய்ட்ஸ் பீடித்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த ஏற்பாடு

இப்படி அமெரிக்க அரசு அறிவித்தது (இ-எ)

வெளி உலகில்

இந்திய - பாக் ராஜீய உறவில் அபிவிருத்தி

இஸ்லாமபாத், ஏப். 23

கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்திய - பாகிஸ்தான் ராஜதந்திர உறவுகளில் அபிவிருத்தி காணப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் முகமட்கான் ஜுனேஜோ நாடாளுமன்றத்தில் இதனைத் தெரிவித்தார்.

விவாதம் ஒன்றுக்குப் பதிலளித்துப் பேசுகையில் பிரதமர் இப்படிச் சொன்னார்.

வெளியுறவு அமைச்சர் யாகுப்கான் பேசுகையில் 'பாகிஸ்தான் அணுசக்தி ஆராய்ச்சியில் ஈடுபட்டு உள்ளது சமாதான நோக்கங்களை நிறைவேற்றவே.

அமெரிக்காவிற்கு பாகிஸ்தானில் தளங்கள் எதுவும் இடையாது'— என்று சொன்னார். (இ-எ)

படையினர் - கறுப்பர் மோதலில் 6 பேர் பலி

ஜோஹன்னர்ஸ்பேர்க், ஏப்ரல் 23

ஆயுதபடையினருக்கும் கறுப்பு இனத்தவருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் ஒன்றில் ஆறு பேர் உயிரிழந்தனர். ஆறு பேரும் கறுப்பு இனத்தவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

கிழக்கு ஜோஹன்னர்ஸ் பேர்கில் நடந்த ஒரு மோதலில் மூன்று பேர் மரணமடைந்தனர்.

இன்னொரு மோதலில் வேறு மூவர் பலியாகினர்.

ஆறு வாரங்களாக கறுப்பு இனத் தொழிலாளர் அங்கம் வகிக்கும் ரயில்வே யூனியன் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது.

இதைத் தொடர்ந்தே இவ்வன்செயல்கள் இடம்பெற்று வருகின்றன.

அரசின் கோரிக்கையை ஏற்று வேலைக்குத் திரும்ப மறுத்த ரயில்வே ஊழியரில் ஆறுயிரம் பேர் வேலை நீக்கஞ் செய்யப்பட்டனர்.

இன்னும் பத்தாயிரம் பேர் வரையில் வேலை நீக்கஞ் செய்யப்படவுள்ளனர். (இ-எ)

ஜிப்ரிஹோவ் ஆஸி பயணம்

சிட்னி, ஏப் 23

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் சேர். ஜிப்ரி ஹோவ் அவுஸ்திரேலியா பயணத்தை ஆரம்பித்துள்ளார். (இ-எ)

பிஜி அமைச்சரவையில் இந்தியரும் இடம்பெற்றனர்

சுவா, ஏப். 24

பிஜி நாட்டு அமைச்சரவையில் இந்தியர்கள் இடம் பெற்றுள்ளனர்.

பிஜி நாட்டில் அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும்கட்சி தோற்கடிக்கப்பட்டு எதிர் கட்சிக் கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றியது தெரிந்ததே.

இந்திய சம்மேளனத்தின் ஆதரவுடன் கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றியது.

அமைச்சரவையில் இடம் பெற்ற இந்திய இனத்தவரான அமைச்சர்கள் விவரம் வருமாறு:

1. திரு ஹரிஷ்சர்மா, உதவிப்பிரதமர்

2. திரு.கிருஷ்ணாநத், வெளியுறவு அமைச்சர்

3. டாக்டர் சதேந்திர நந்தர், சுகாதார அமைச்சர். (இ-எ)

ஹரியாணா தேர்தல் திகதி அடுத்தவாரம்

புதுடில்லி, ஏப் 23

ஹரியாணா சட்டசபைத் தேர்தலுக்கான திகதி அடுத்தவாரம் நிர்ணயிக்கப்படும்.

இது பற்றிய மாநாடு ஒன்றை தேர்தல் ஆணையாளர் அடுத்த வாரம் கூட்டியிருக்கிறார்.

ஹரியாணா மாநிலத் தேர்தல் அதிகாரிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்வர். (இ-எ)

திவாரி தென் கொரியா விஜயம்

சோல், ஏப் 23

இந்திய வெளியுறவு அமைச்சர் என். டி. திவாரி தென் கொரியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கிறார்.

தென் கொரிய ஜனாதிபதி, அமைச்சருக்கு விருந்துபசாரம் அளித்துக் கௌரவித்தார்.

இரு நாடுகளும் வர்த்தக கலாசார உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று அமைச்சர் திவாரி அப்போது சொன்னார். (இ-எ)

உச்சி மாநாடு பற்றி மாஸ்கோ டைம்ஸ்

மாஸ்கோ, ஏப் 23

அடுத்த உச்சி மாநாடு வாஷிங்டனில் நடைபெற வேண்டும் என்று ரஷ்யத்தலைவர் மிகையில் கோர்பச்சேவ் விரும்புகிறார்.

அந்த மாநாடு பலனளிக்கக்கூடிய முடிவு களைக் கொண்டுவரக் கூடியதாக இருக்கவேண்டும்—

இப்படி ரஷ்யாவின் 'மாஸ்கோ டைம்ஸ்' பத்திரிகையில் ரஷ்ய அரசியல் விமர்சகர் ஒருவர் எழுதியிருக்கிறார். (இ-எ)

ஜப்பானில் பூகம்பம்

டோக்கியோ, ஏப்.23

ஜப்பானில் நேற்று பூகம்பம் ஏற்பட்டது. இதனால் அணுமின்சார நிலையம் ஒன்று சேதமடைந்தது. ஏனைய சேதவிபரங்கள் வெளியாகவில்லை. (எ)

தொண்டினால் உய்திபெற்ற அப்பர் அடிகள்

திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நேற்று ஆகும். இதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

இன்றைய காலகட்டத்தில் அப்பர் பெருமானின் வாழ்க்கை நெறி, நம்மவர்கள் அனைவருக்கும் வழிகாட்டும் ஒரு வாழ்வைத் தத்துவமாக இருக்கிறது. சேவையுணர்வும் தொண்டு உள்ளமும் இன்றைய சமுதாயத்திற்கு மிகவும் தேவைப்படுகின்ற செயற்பாடுகள் ஆகும்.

இவருடைய பக்திச் சுவை சொட்டும் பாடல்கள் 4ம் 5ம் 6ம் திருமுறைகளாக சைவ மக்களால் போற்றப்பட்டு வருகின்றன. ஆறும் திருமுறையிலே வருகின்ற திருத்தாண்டகப் பாடல்கள் உள்ளத்தை உருக வைக்கும் தன்மை கொண்ட அற்புதமான பாடல்களாக அமைந்திருக்கின்றன. அப்பர் பெருமானுக்கு திருத்தாண்டகம் பாடியமையால் தாண்டகவேந்தர் என்ற சிறப்புப் பெயரும் கிடைத்தது.

திருநாவுக்கரசரை சமணர்கள் நீற்றறையில் இட்டார்கள். நீற்றறை அவரைத் தன்புறத்தே விட்டுவிட இவருடைய பக்தி உறைப்பானது, உறுதியானது கொண்ட கொள்கையில் செய்யும் செயல்களில் தடுமாற்றமும் இல்லை. சோர்வும் இல்லை திருக்கயிலை காணப் புறப்பட்ட திருநாவுக்கரசரின் உடல் நொந்தது நடந்து சென்று, பின் தவழ்ந்து சென்று, பின் உருண்டு சென்ற அப்பர்,

"ஆளும் நாயகன் இருக்கை கண்டலாது மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்"

என்ற உறுதியான உள்ளத்துடன் இருந்தார். திருக்கயிலைக் காட்சி திருவையாற்றிலே இவருக்கு கிடைத்தது.

கையிலே உழவாரப் படை, திருமேனி முழுவதும் திருவெண்ணீறு பூசிய திருவேடம் இறைவன் நினைந்து நினைந்து உருகுவதால் கண்களிலே பொழிகின்ற ஆனந்தக் கண்ணீர், சிவ, சிவ என்று சிவநாமத்தை உச்சரித்து சிவன் கழலே பணியும் சீர் மிகுந்த எழிற்கோலம், இவை தான் அப்பர் பெருமானின் புறத்தோற்றம் ஆகும். சிவனடியார் வேடத்திற்கும், திருவேடத்திற்கு இலக்கணமாய் வாழ்கின்ற அப்பர் பெருமானும், ஞானத்தின் திருவுருவாய் நான்மறையின் தனித்துணையாய் விளங்குகின்ற ஞானக் குழந்தையாகிய சம்பந்தருக் முதலிலே சந்திக்கின்ற காட்சி மிக மிக அற்புதமானது. அப்

பர் எங்குற்றார் என்று இன்கையிலே வீற்றிருக்கின்ற சம்பந்தக் குழந்தை வினவ, அடியேன் இங்குற்றேன், உம்மைத் தாங்கி வருகின்ற பேறு பெற்றுள்ளேன் என்று அப்பர் பதில் கூறும் காட்சி. அடியார்களின் இணக்கத்தை தத்ரூபமாக நமக்கு காட்டும் அழகுக் காட்சியாக பெரிய புராணத்திலே மிளிர்கிறது. மெய்ப்பொருள் ஞானம் பெற்றவர் சம்பந்தர், மெய்மைத் தவத்து வேடம் பூண்டவர் அப்பர் இவர்கள் இருவரும் சேர்ந்து சிவப்பணி பல செய்தார்கள். படிக்காசு பெற்று பட்டினியால் வாடிய மக்களின் பஞ்சம் தீர்த்தார்கள். திருமறைக் காட்டில் வேதங்களால் பூட்டப்பட்ட கதவை திறக்கும்படி அப்பரும் மீண்டும் பூட்டும்படி சம்பந்தரும் பதிகம் பாடினார்கள்.

"நாம் யார்க்கும் குடி அல்லோம்" என்ற சான்றாண்மை வீரம், "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற தொண்டு உணர்வு, இறைவன் மீது அசைக்கமுடியாத பக்தி வைராக்கியம், சைவத்தையும் தமிழையும் தமிழ் நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற செயல் வேகம், துன்பங்கள் தரங்கள் தோன்றிய பொழுது அவற்றினால் தளர்வடையாத உறுதியான மனம், இவை யாவற்றையும் அணிகலனாகக் கொண்டு வாழ்ந்தவரே திருநாவுக்கரசர் ஆவார். அவர் வாக்காலும் வாழ்வாலும் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை நெறி எங்கள் சமுதாயத்திற்குவழிகாட்டும் வாழ்வு நெறியாக மாறவேண்டும் என நாம் அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஞானக்கதிர்

தன் முழுவதும் சிவன் பால் சென்றுவிட்டது. சிவபோகப் பேரின்பத்தில் திளைத்துவிட்டது. வேகுகின்ற கண்ணும் புக் காற்று நாவுக்கரசருக்கு வீசும் தென்றலாக மாறியது.

— சிவ. மகாலிங்கம் —

பொய்யாமொழி

குறள்:

உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்

பொருள்:

வந்துள்ள துன்பத்தை நீக்கி, இனித்துன்பம் வராமல் முன்னதாகவே காக்கவல்ல தன்மையுடையவரைப் போற்றி நட்புக் கொள்ளவேண்டும்.

ஓய்வு பெற்றார்

சுன்னாகம், ஏப். 24

வவுனியா மாவட்ட தபால் அத்தியட்சகர் அலுவலகத்தில் கடமை யாற்றிய திரு. சிவ. நாகேஸ்வரசர்மா அண்மையில் தபாலதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

திரு சர்மா ஆரம்பத்தில் சிறிது காலம் உள்ளூராட்சிச் சேவையிலும் காசுக்கட்டளைகள் அலுவலகத்திலும் எழுதுவினைஞராகக் கடமையாற்றிப் பின்னர் தபால் அதிபர் சேவையில் சேர்ந்து கொழும்பு மத்திய தொலைத் தொடர்பு நிலையம், புறக்கோட்டை அனுராதபுரம், திருகோணமலை, ஹற்றன், சுன்னாகம், செங்கலடி அஞ்சல் அலுவலகங்களிலும் இறுதியாக வவுனியா மாவட்ட தபால் அத்தியட்சகர் அலுவலகத்திலும் கடமையாற்றி ஓய்வுபெற்றார். (இ-27)

அச்சுவேலியில்

மே தினத்தில் சூசையப்பர் திருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.24

அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழாக் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகியுள்ளன.

தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித சூசையப்பரின் திருநாள் பலிப்பூசை தொழிலாளர் தினமான மே முதலாம் திகதி காலை நடைபெறும்.

தினமும் மாலையில் பாடற்பலி நடைபெற்று வருகின்றன.

அருட்திரு செபஸ்தியன் அடிகளாரின் அருளுரைகள் தினமும் இடம் பெறுகின்றன.

இக்காலகட்ட மக்களின் இன்னல்கள் விலகவும், தொழிலாளர் நலன் ஓங்கவும், மக்களை பிரார்த்திக்குமாறு பங்குத்தந்தை அருட்திரு றெஜினோல்ட் அடிகளார் கேட்டுள்ளார்.

செய்திக்கொத்து

பயிற்சி வகுப்புகள்

வேலணை, ஏப். 24

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவின் புதிய பயிற்சி வகுப்புக்கான அங்குரார்ப்பணக் கூட்டம் வேலணை சைவப் பிரகாச வித்தியாசாலையில் அதிபர் திரு செ. வரதலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இப்படைப் பிரிவின் புதிய பயிற்சி வகுப்புகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (இ-எ-167)

தேசிக்காய்க்கு தட்டுப்பாடு

கொடிகாமம், ஏப் 24

கொடிகாமம் மத்திய சந்தையில் கடந்த சில நாட்களாக தேசிக்காயிற்கு வெகு பஞ்சம் ஏற்பட்டுள்ளது (இ-75)

அகதிகளுக்கு உதவி

கிளிநொச்சி, ஏப் 24

கிளிநொச்சியில் கடந்த சில மாதங்களின் முன் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்ட சுமார் 800 ஏழைக் குடும்பங்களுக்கு இலவசமாக உடுபுடவைகள் வழங்க சாவகச்சேரி லயன்ஸ் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-எ-76)

இடமாற்றம்

அம்பாறை, ஏப். 24

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பொத்துவில் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு பி சுந்தரம்பிள்ளை சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பொத்துவில் உதவி அரசாங்க அதிபராக ஐந்து வருடங்கள் சிறந்த சேவையாற்றிய திரு. சுந்தரம்பிள்ளை, தமது சேவைக் காலத்தில் பொத்துவில் பிரதேச தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்காகவும், அப்பகுதி வாழ் மக்களின் அபிவிருத்திக்காகவும் உழைத்தார். (இ-14)

முஸ்லிம்காங்கிரஸ் போட்டியிடும்

அம்பாறை, ஏப் 24

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எதிர் வரும் பிரதேச சபைத் தேர்தலில் பங்குபற்றுவதெனத் தீர்மானித்துள்ளது.

அட்டாளைச்சேனையில் நடைபெற்ற காங்கிரஸின் மத்திய குழுக்கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது

இந்த மத்திய குழுக் கூட்டத்தில் கட்சித் தலைவர் சட்டத்தரணி ஜனாப் எம். எச். எம். அஷ்ரப், சுகயீனம் காரணமாகக் கலந்து கொள்ளவில்லை.

மேலும் "முஸ்லிம் காங்கிரஸ்" என்னும் பெயரில் கட்சிப் பத்திரிகை ஒன்றும் விரைவில் வெளிவரவிருக்கின்றது. (இ-14)

நிரந்தர ஆணையாளர்

வேலணை, ஏப்24

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் வடபகுதி மாகாண ஆணையாளராக கடமையாற்றிய கந்தையா இராஜசிங்கம் நிரந்தர மாகாண ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இக்கிலாந்து மகாராணியாரின் சேவைச் சகோதரன் விருதும் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-எ-167)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொதேண் இன்ஸ்ரிரியூட்
சண்டிக்குழி.
O/L Day Classes
காலை 8-30 -- 1-00 மணி வரை
குறிப்பு:
1. கடந்த பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்றுக்கொடுத்த நிறுவனம்
2. பாதுகாப்பான இடம்
3. மாதாந்தப்பரீட்சை நடாத்தப்படும்
ஆரம்பம்: 27 - 04 - 87

உதயன்

24 - 04 - 1987 வெள்ளிக்கிழமை

நொதேண் இன்ஸ்ரிரியூட்
சண்டிக்குழி.
PHYSIC] CHEMISTRY] **A/L 87**
வினாவிடை வகுப்புகள்
ஆரம்பம்: 27 - 04 - 87
1-30 மணி



நல்லூர்ப் பகுதியில் நேற்று விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் சேதமடைந்த வீடொன்றின் இரண்டாம் படத்தில் காண்கிறீர்கள். (இ-10) (படப்பிடிப்பு: ஜெயம்)

தீவிரவாத முகாம்கள்

முற்றாக நிர்மூலமாக்கப்படுமாம்

அரசின் முடிவு குறித்து நாடாளுமன்றத்தில் காமினி

கொழும்பு ஏப் 24 யாழ் குடாநாட்டில் உள்ள தமிழ்த் தீவிரவாத முகாம்களை முற்றாக நிர்மூலமாக்குவது என்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

இந்த நோக்கிலும் பேச்சுக்கள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் அரசு தயாராக உள்ளது.

காணி அமைச்சர் திரு காமினி திஸநாயகா நேற்று இதனை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிக்கும் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது நடந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அரசுபக்கா எம். பி. திரு: வசந்தா உதயரத்தின பேசுகையில்.

"1971இல்இடம்பெற்ற கிளர்ச்சியிலும் பார்க்க இன்றைய தீவிரவாதம் மிகவும் ஆபத்தானது" என்று சொன்னார்

மகாசும எம். பி திரு. தினேஸ் குணவர்த்தன பேசுகையில் "சகல மக்களையும் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை. இக்கடமையைச் சரிவரச் செய்ய முடியாது போனால் அரசு பதவி விலகுவதே சரியான வழி" என்று சொன்னார்

மதவாச்சி எம். பி. திரு மைத்திரிபாலசேன நாயக்கா பேசுகையில் "பத்து ஆண்டுகள் பதவியில் இருந்தும் இந்த அரசினால் பயங்கரவாதப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியவில்லை தனது மக்களைப் பாதுகாக்க முடியாத நிலையில் இந்த அரசாங்கம் பதவியில் ஏன் இருக்கவேண்டும்?" என்று கேட்டார்.

அமைச்சர் திருமதி விமலா கன்னங்கரா பேசுகையில் தாய் நாட்டைப் பாதுகாக்கும் பணியில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

விவாதம் தொடர்ந்து நடைபெறுகிறது (இ-எ)

மினிவான்கள் மோதின!

யாழ்ப்பாணம், ஏப். 24 இரண்டு மினிவான்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டன. 15 பேர் காயமடைந்தனர்.

நேற்று மாலை 3. 30 மணி அளவில் புத்தூருக்கு அருகாமையில் இச்சம்பவம் நடைபெற்றது.

மினி வான்கள் மோதலில் காயமடைந்தோர் விவரம் வருமாறு:-

எஸ். சிங்கநாயகம் (வயது 47) நல்லூர், எம் கமலாதேவி (வயது 56) நல்லூர், எஸ். இராசம்மா (வயது 64) உடுப்பிட்டி, இராஜேந்திரம் (வயது 48) அல்வாய் கிருஷ்ணகுமார் (வயது 21) அல்வாய், சே. கிருஷ்ணசாமி (வயது 34) எஸ். யோகமணி (வயது 38) கரவெட்டி, கே. பிரபு (வயது 18) கரவெட்டி, எஸ். ஜெயலட்சுமி (வயது 36) யாழ்ப்பாணம், எஸ். கிருஷ்ணகுமார் (வயது 37) யாழ்ப்பாணம்

தொண்டமனாறு ஷெல் தாக்குதல்

கரவெட்டி ஏப், 24 தொண்டமனாறு இராணுவ முகாமில் இருந்து புதன் இரவு 11-30 மணி அளவில் மக்கள் வாழும் பகுதிகளுக்கு ஷெல்கள் ஏவப்பட்டன.

தவிண்டில் தோட்ட வெளியில் இரு ஷெல்கள் வீழ்ந்தன.

வண்டார், கல்லுவம், உடுப்பிட்டி, ஞ்சர் கடை போன்ற இடங்களை நோக்கியும் ஷெல்கள் ஏவப்பட்டன.

இதனை அடுத்து அவ்வப்பகுதி மக்கள் பதுங்கு குழிகளில் இருந்து உயிரைப் பாது காத்தனர்.

இந்த ஷெல் தாக்குதல்கள் 11-30 மணி தொடக்கம் 1 மணி வரை நீடித்தன. (இ-70)

ஷெல்!

யாழ்ப்பாணம், ஏப் 24 நேற்று மாலை 6 மணி அளவிலும் நேற்று நள்ளிரவும் கோட்டை முகாம் பகுதியில் கடும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப் பட்டன. (உ)

வித்சாரம்

என்ன முரளியார், இந்தப் பயங்கரப் பொம்மர் குண்டுவீச்சுக்களையும் நீர் வந்திட்டீர்! துணிஞ்ச ஆள்தான்.

நீ சொல்லுறதும் உண்மைதான். சாவு வாற நேரத்திலை வரும். அதுக்காகப் பாக்கவேண்டிய வேலையை ஒத்திப் போட ஏலாது தான்.

அப்ப எங்கடை நிலைமை நினைச்சுப் பாரேன். எந்தப் பயங்கர நிலையுக்கையும் சம்பவங்களைப்பற்றி அந்த நாளுக்குச் சனத்துக்குப் புதினம் தெரிவிக்கவேணும் பகலும் இரவும் வேலை. வேலைக்கு வெளிக்கிடுற நேரமும், வேலை விட்டுப் போற நேரமும் பயங்கரச் சத்தங்களைக் காதில் வாங்கி, நெஞ்சில் ஒலிக்கச் செய்து தான் போக வேண்டி இருக்கு.

விஷயத்துக்கு வருவம். இனி என்ன! இராமண்ணுமாருக்கு தமிழரை அழிக்க "ஒப்பிரேஷன்" குடுத்தாச்சு. அதுவும் அங்குலமாய் தாக்குதல் நடத்த வேண்டிய தேவை வந்தாலும் அவை அதைச் செய்யலாம் என்டு அனுமதி வழங்கியாச்சு.

அவை இனித்துணிந்து விடுவினம். பாக்கியில் பேப மணித்தியாலத்துக்கு ஒருதடவை, குடாநாட்டில் பொம்மர் தாக்குதல் நடந்து வாறதாய் இலங்கை வானொலி தம் பிரத் தொனியில் சந்தித

செவ்வாய்க்கிழமை புறக்கோட்டையில் குண்டுவெடிப்பு புதன்கிழமை கோட்டையில் மந்திரிசபைக் கூட்டம். அன்டைக்குப் பின்னேரம் தென்மராட்சி வடமராட்சியில் குண்டுவீச்சு. வியாழக்கிழமை விடிந்திச்சு இணுவில், தாவடி, கொக்குவில், நல்லூர், வல்லை, தொண்டமனாறு, பருத்தித்துறை, இயக்கச்சி, காங்கேசன் துறை என்டு பல இடங்களிலும் ஹெலியும் பொம்மரும் தங்கடை ஆசை தீர அடிச்சினம். கீழை அப்பாவி உயிருகள் இருக்கெண்டு அவைக்கு என்ன கவலை. சிங்களவருக்குத் தான் உயிர் இருக்கு. மற்றவைக்கு இல்லை என்ட நினைப்பு.

இரண்டு மூண்டு கிழமைக்கு வானத் தாக்குதலைத் தொடர்ந்து நடத்தி ஒரு கை பார்க்கிறது என்டு தான் உயர்ந்த வட்டாரங்கள் வன்மம் கொண்டிருக்கினமாம்.

திருமலையும், புறக்கோட்டையும் நடந்த பிறகும் தாம் சும்மா பார்த்துக்கொண்டு இருக்கேலாது என்டு கதைக்கினமாம். ஏதோ இது வரை காலமும் பாவபுண்ணியம் பார்த்தவை மாதிரி!

உலை, போராளிகள் இலக்குகளையும், போராளிகளையும் அழிப்பதாகச் சொல்லுறதும் தமிழ்ச் சனத்தைக் கொல்லத் திட்டம் தீட்டி இருக்கினம் என்டதை உலகம் உணராமலே போகும். பாக்கவிக்கயே லண்டன் பேப்பர்கள் எல்லாம் எழுதியிருக்கு

செவ்வாய்க்கிழமை பின்னேரம் நடந்த புறக்கோட்டைச் சம்பவம் சம்பந்தமான செய்தி லண்டன் பேப்பர்களின் படத்தோடை புதன்கிழமை காலையில் வெளிவந்திருக்கு! ஆசிரியத் தலையங்கங்கள் வேற.

இஞ்சை நாங்கள் யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவங்களை எடுத்துச் சொல்லப் பேப்பரை நேரத்துக்கு அடிக்க முடியாமல் இருக்கு

இரவில் மின்சாரம் இல்லை பகலில் மின்சாரம் கெட்டு என்டு ஒரு நரக வேதனை. அதுக்குள்ளை ஷெல்லடி, பொம்மர் அடி அடா, அப்பா பேப்பர்களும் அந்நியாயவசியச் சேவை விசேஷ ஏற்பாடு செய்ய வேணும் என்டு எந்த ஒழுங்கும் இல்லை.

இதுக்குள்ளை செய்தி எடுக்கப் போற பத்திரிகையாளர் மீது எங்கடை சனம் சன்னதம் கொள்ளுதாம். பாதிக்கப்பட்டவை என்டால் மனம் நொந்த நிலையில் என்ட மறந்துவிடலாம். ஆனால் இஞ்சை நடுவுக்கை நிற்கிற சில ஆக்கள் உந்தக் கோணங்கிக் கூத்துகள் செய்யினம்.

நேற்றைக்கு பருத்தித்துறையில் அடிச்ச குண்டு ஆளுங்கட்சியின் அமைப்பாளர் வீட்டுக்கு மேலை விழுந்திருக்கு நல்லூரில் குண்டு விழுந்து சேதமடைஞ்ச வீடு ஒண்டு பிரதமர் பிரேமதாசா யாழ்ப்பாணம் வாற போது தங்கிற வீடு. கடைசியாய் 83 ஜனவரியில் இஞ்சை வந்த போதும் அங்கை தான் நிண்டவராம்.

பிரதமரைப் பற்றிச் சொல்லத் தான் ஞாபகம் வருகுது. முந்தநாள் புதன்கிழமை அரசாங்க, வர்த்தக வங்கி விடுமுறை என்டு முதல் நாளே அறிவிச்சுப் போட்டினம் ஆனால் விடுதலை நாளில் மந்திரிசபை கூடி எடுக்கிற முடிவுகள் செல்லுபடியாகாது என்டபடியால் குடாநாடு மீது வானத் தாக்குதலை தீவிரமாகத் தொடர எடுத்த முடிவும் செல்லுபடியாகாது.

ஷெல்களால்...

(12-பக்கத் தொடர்ச்சி) தங்கியிருந்த நோயாளர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடினர். தென்னை வாழை மரங்கள் முறிந்த நிலையில் சிதறிக்கிடந்தன.

திருமதி கதிரவேலு இராஜேஸ்வரி, திருமதி கனகசபை சரஸ்வதி, திரு எஸ் கந்தசாமி ஆகியோரின் வீடுகளுக்கு அருகில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

மக்கள் பதுங்குகுழிகளிலும் சமையலறை புகை போக்கிகளுக்குள்ளும் புகுந்திருந்து தம்மைப் பாதுகாத்துக் கொண்டனர்.

திருமதி பவளம்மா நடராசா என்பவரது வெளிக்காணியில் நின்ற பெரிய புளியமரம் ஒன்றின் அடிப்பகுதியில் விழுந்து வெடித்த ஷெல் விளும் புளியமரம் அடியோடு சிதறிய நிலையில் காணப்படுகின்றது (இ-11)

விமானத்...

(1ம்-பக்கத் தொடர்ச்சி) றது. தமிழர் படுகொலை செய்யப்படுவதில் இருந்து காப்பாற்றப்பட வேண்டும்.

அ. இ. மு. க. எம். பி திரு ஆலடி அருணா:-

தமிழர் மீது விமானத் தாக்குதல்கள் தொடர்கின்றன இந்திய அரசு உடனடியாகத் தலையிட வேண்டும்.

இந்திரா காங்கிரஸ் எம். பி திரு நாராயணசுவாமி:-

மத்திய அரசு தமிழரைக் காப்பாற்ற சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்

ஜனதா எம். பி திரு. கே பி யாதவ்:-

தமிழரைக் காப்பாற்ற வதில் இந்தியா தாமதம் காட்டக் கூடாது. விரைந்து செயல்பட வேண்டும்.

கம்யூனிஸ்ட் எம். பி. திரு ஹோஷி:-

இலங்கை நிலைமை

பொம்மர்கள் வட்டமிட

பஸ் நிலையப் பகுதியில் ஏற்பட்ட அமளி துமளி

யாழ்ப்பாணம், ஏப் 24 நேற்றுக் காலை யாழ் நகர பஸ்நிலையம் சிறிது நேரம் பெரும் அமளிதுமளிப்பட்டது

காலை 9 மணியளவில் இரு பொம்மர்கள் திடீரென யாழ்நகரை வட்டமிடவே யாழ் நகர பஸ் நிலையத்தில் நின்றவர்கள் பெரும் அல்லோலகல்லோலப்பட்டனர்.

போக்கு வரத்துகளைக் கவனியாமல் வாகனங்கள் நகரைவிட்டு வேகமாக ஓட முயன்றன.

சைக்கிள்காரர்கள் சைக்கிள்களை வீதிகளில் போட்டுவிட்டு கட்டடங்களில் ஓடிச்சென்று ஒளித்தனர்.

பாதசாரிகள் ஓடிப்பதா அல்லது பஸ் பிடித்து வீடு செல்வதா எனப் புரியாது அங்கலாய்த்தனர்.

யாழ் பஸ்நிலையத்தைக் காலிசெய்த வாகனங்கள், பொம்மர்கள் நல்லூர்ப் பகுதியை வட்டமிடவே மீண்டும் பஸ்நிலையத்தை நோக்கி ஓடிவந்ததையும் காணமுடிந்தது. (இ ஸ)

வானை நோக்கி தாக்குதல்

கரவெட்டி, ஏப். 24 நேற்றுக்காலை பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த மினி வான் ஒன்றை நோக்கி ஹெலிகொப்டர் தாக்குதல் நடத்தியது.

ஆனால் இத்தாக்குதலின்போது எவ்வித சேதமும் இன்றி அந்த வான் வந்து சேர்ந்தது. (இ-70)

நிர்வாகசபைக் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 24 யாழ்நகரில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை காரணமாக இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த யாழ் உதைபந்தாட்டச் சங்க (லீக்) நிர்வாக சபைக்கூட்டம் மறு அறிவித்தல்வரையில் கோடப் பட்டுள்ளது. (இ-)

மற்றி அரசு சபைக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். (இ-எ)

நாயன்மார்..

(12-பக்கத் தொடர்ச்சி) உடல் சிதைந்த நிலையில் மரணமானார்கள்.

காயமடைந்த சோமசேகுமார் (வயது 2) என்ற குழந்தை மிகவும் ஆபத்தான கட்டத்தில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு, நேற்றிரவு மரணமானது.

இக்குழந்தையின் தகப்பன் கதிரேசு ரவீந்திரராஜா (வயது 29) தாய் கதிரேசு ஜீவராணி (வயது 22) பிரேமதாஸ் மதியரசி (வயது 27) ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

இரு வீடுகளும் சேதமுற்றன. (உ-10)

குடாநாட்டில்...

(1ம்-பக்கத் தொடர்ச்சி) ந்து வீடு பலத்த சேதமுற்றது

நேற்று வீசப்பட்ட மற்றொரு குண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைப்பாளர் திரு எஸ் கணேசலிங்கத்தின் வீட்டுப் பகுதியிலும் விழுந்து வெடித்தது

பருத்தித் துறையில் பொம்மர் தாக்குதலில் ஐவர் படுகாயமடைந்தனர்

தொண்டமானாறில்

தொண்டமானாறில் பொம்மர்கள் நேற்று இரண்டு முறைகள் குண்டு வீசின

கெருடாவில், மயிலியதனைப் பகுதியில் பல ஓலைக் குடிசைகள் எரிந்து நாசமாகின.

எனினும் அதிக உயிர், உடற் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

வல்வெட்டித்துறை

வல்வெட்டித்துறையில் நேற்றுக் காலை 9 மணிக்கும், நண்பகல் 12 மணிக்கும் இரண்டு தடவைகள் மூன்று பொம்மர்களும் ஹெலிக்கொப்டர் ஒன்றும் கொடூரத் தாக்குதலை நிகழ்த்தின.

நெடியகாடு, கொலிகண்டிப் பகுதியில் நடத்தப்பட்ட இத்தத் தாக்குதலில் மூன்று வயதுடைய அருணதாஸ் அனிதா என்ற பெண் குழந்தை கொல்லப்பட்டது.

பதினொரு பேர் படுகாயமுற்றனர்.

இப் பகுதியில் 17 வீடுகள் சேதமுற்றன.

பொம்மர்களில் இருந்து பதினேழு தடவைகள் குண்டுகள் வீசப்பட்டன. அவற்றில் ஒரு குண்டு வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டது.

இததிராணி மருத்துவமனையின் மதில் சுவர்களும் சேதமுற்றன.

இத் தாக்குதல்கள் நிகழ்ந்த வேளை மூன்று பிரம்பப் படகுகள் கரைக்கு அண்மித்து வந்தனவாயினும் அவற்றில் இருந்து தாக்குதல்கள் ஏதும் நடத்தப்படவில்லை.

காங்கேசனில்

நேற்றுக்காலை 9-40 மணியளவில் மாவிட்டபுரத்திலும், காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலைக் காணியிலும் மேற்கொள்ளப்பட்ட ஹெலிக்கொப்டர், பொம்மர் தாக்குதலில் அப்புக்குட்டி நாகம்மா (62 வயது) என்ற வயோதிமாது அந்த இடத்திலேயே மரணமானார்.

இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார் மூன்று வீடுகள் முற்றாகச் சேதமாயின பதினேழு வீடுகளின் பகுதிகள் சேதமடைந்தன.

குஷீனா அலுமினியம் தொழிற்சாலை, வாளித் தொழிற்சாலைகளும் பாதிக்கப்பட்டன.

இரண்டு ஹெலிக்கொப்டர்களும் மாவிட்டபுரம், காங்கேசன் துறை, வீமன்காமம், சட்டிவன், தெல்லிப்பளைப் பகுதிகளைச் சுற்றிக் கண்டபடி சுட்டன

சுன்னாகத்தில்

இதேவேளை நேற்றுப் பிற்பகல் 5.30 மணியளவில் பலாலியில் இருந்து 4 ஹெலிக்கொப்டர்களும், இரண்டு குண்டு வீச்சு விமானங்களும் ஒரு அவ்ரோ ரக விமானமும் காங்கேசன் துறையில் இருந்து சுன்னாகம்- மருதனாமடம் வரையான மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி ஒரு மணித்தியாலத் தாக்குதலை மேற்கொண்டன

சாதாரண பிரயாணிகள் விமானத்திலிருந்து குண்டு வீசப்பட்டது இதுவே முதற்தடவையாகும்.

இக் குண்டு வீச்சுத் தாக்குதல் பற்றிய இழப்பு விவரங்கள் இன்னும் தெரியவில்லை

அதிக இழப்புகள் பொதுமக்களுக்கு ஏற்பட்டிருக்கலாமென நம்பப்படுகிறது

இவைக்கச்சி, புதுக்காட்டுச் சந்தியிலும் பொம்மர் தாக்குதல்கள் நடைபெற்றன.

ஜே. ஆரை..

(1ம்பக்கத் தொடர்ச்சி) பொலீஸார் ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்தினர்.

ஊர்வலத்தில் வந்தவர்களிடம் இருந்து மகஜரை, ஜனாதிபதியின் சிறப்புப் பிரதிநிதி பெற்றுக்கொண்டார் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

ஜனநாயக அரசாக செயல்பட்டு குடிமக்களைக் காப்பாற்ற அரசு தவறிவிட்டது எனவே ஆட்சிப் பொறுப்பை இராணுவத்திடம் ஒப்படைக்க வேண்டும்— இப்படி ஊர்வலத்துக்குத் தலைமை வகித்த திரு எஸ். பி. சேனரத்தின தெரிவித்தார்

மூளாய் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானம்

மூளாய் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேவாலயத்தின் நூற்றாண்டு நிறைவை நிலைப்படுத்தும் நியதிகொண்டு நவோத்தர சகஸ்ர (1009) பஞ்சகுண்ட பக்ஷ சங்காபிஷேகம் சித்திரை 13ஆம் திகதி (26-4-1987) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

பிரதம குருமார்கள்:

சர்வபோதகர்
சிவஸ்ரீ சாம்பசிவக் குருக்கள்
முத்தமிழ்க் குருமணி
நா. சர்வேஸ்வரக்குருக்கள்
கிரியாபூஷணம், சிவாசாரியமணி
சிவஸ்ரீ வை. சபாரத்தினக்குருக்கள்
கிரியாபூஷணம்
சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்
தர்மசாஸ்தாகுருகுலம், இணுவில்.
சிவாகமகிரியாரத்தினம்
சிவஸ்ரீ சிவ. நித்தியானந்தக்குருக்கள்
சுன்னாகம்.
சிவாச்சாரியமணி,
அ மணிவண்ணக்குருக்கள்,
மாவிட்டபுரம்.
சர்வசாதகாசிரியர்:
சாம். ஜெகதீஸ்வரசர்மா

சங்காபிஷேகம் முடிந்தபின் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். அத்தருணம் அடியார்கள் வந்து எம்பெருமான் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

இ. பொன்மலர் (முகாமையாளர்)
(2837)

பிரயாண ஒழுங்குகள்
குவைத்

பின்வருபவர்களுக்கு பிரயாண ஒழுங்குகள் உடன் செய்து தரப்படும்.

* தொழிலாளர்: (Labour)
* தச்சுவேலையாளர் (Carpenter)
* மேசன் (Mason)
* கனரகவாகன சாரதி (H. D. Driver)
* ஸ்ரீல் தொழிலாளர் (Steel Workers)
* மெக்கானிக் (Mechanics)
* மின்னியல் சேவையாளர் (Electrician)

பாஸ்போர்ட் 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்

கொழும்பு முகவரி:
Construction & Development Ltd.
37, Jeyasingha Mawatthe,
NUGEGODA.

V. P. பாலா
C/o N. V. பொன்னுத்துரை,
பாடசாலை ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு கோண்டாவில். (1224)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15, ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி 24 - 04 - 1987
Printed and Published by Uthayan Publications (Private) Ltd . 15, Second Lane, Power House Road, JAFFNA.
Registered as a Newspaper at the General Post Office. Under Number QJ / 94 / N/87 Telephone, 24808, 22078

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org